# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

**S.C. No.167/2023**

1. Deposition of Witness for : P.W.11

2. Name : திரு.அண்ணாதுரை

3. Father's Name :

4. Occupation : காவல் ஆய்வாளர், மாவட்ட குற்றப் பிரிவு, செங்கல்பட்டு

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20.01.2026**.**

எதிரிகள் ஆஜர். 2,4,5 எதிரிகள் ஆஜர் இல்லை மனு ஏற்பு.

As per Sec 530 Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 recording of evidence ordered to be held through VC Mode. சாட்சி VC மூலமாக சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :-

நான் தற்போது செங்கல்பட்டு மாவட்டம் மாவட்டக் குற்றப் பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் 2019 வருடம் காவல் ஆய்வாளராக சத்துவாச்சாரியில் பணிபுரிந்தேன். மேற்படி காவல் நிலையத்தில பணி புரிந்த உதவி ஆய்வாளர் இராமச்சந்திரனின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். 20.04.2019 தேதி இரவு 11.30 மணியளவில் உதவி ஆய்வாளர் இராமச்சந்திரன் நிலைய அலுவலில் இருந்தபோது கோவிந்தன் என்பவர் நிலையம் ஆஜர் ஆகி எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.191/2019 இ.த.ச. பிரிவு 302 ன் கீழ் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தார். இவ்வழக்கின் புகார்தாரர் கோவிந்தன் வழக்கு விசாரணையின்போது இறந்துவிட்டார் அவரது இறப்புச் சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கோவிந்தன் கொடுத்த எழுத்து மூலமான

புகார் அ.த.சா.ஆ.8 ஆகும். அந்த அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.9 ஆகும். மேற்படி மேல் விசாரணைக்கு கோப்பிணை பெற்று 21.04.2019 தேதி விடியற்காலை 00.30 மணியளவில் சம்பவயிடமான மாவட்ட நீதிமன்ற அருகிலுள்ள சத்துவாச்சாரி ஆவின் பால் பண்ணை அருகே சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் கணேசன் மற்றும் குமரன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தேன். மாதிரி வரைப்படம் அ.த.சா.ஆ.10 ஆகும். பின்னர் 01.15 மணியளவில் சம்பவயிடத்தில் இரத்தம் தோய்ந்த சிமெண்ட் தரை மற்றும் இரத்தம் தோயாதா சிமெண்ட் தரை வெட்டி எடுத்து அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.11 ஆகும். மேலும் அங்கிருந்த இரத்த மாதிரியை பஞ்சினால் இரத்தத்தை சேகரித்து பின்னர் சாட்சிகள் 06.30 முதல் 07.30 வரை சாட்சிகள் கோவிந்தன், ஆண்டாள், ரமேஷ், லோகேஷ், பாஸ்கர், கணேசன், குமரன், சதீஷ் மற்றும் சாமுண்டீஸ்வரி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்று காலை 08.00 மணி முதல் 10.00 மணி வரை பிரேதத்தை சாட்சிகள் பஞ்சாயத்தார் முன்னிலையில் விசாரித்து பிரேத விசாரணை செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.12. பின்னர் பிரேத பரிசோதனைக்காக காவலளர் வெங்கடேசன் என்பவரை பணி நியமித்தேன். அவர் பிரேத பரிசோதனை முடிந்து இறந்த நபரான செல்வராஜ் என்பவர் அணிந்திருந்த ஆடைகளான இரத்தக் கறை படிந்த Blue Colour Jeans Pant ஒன்று இரத்தக் கறை படிந்த Blue Colour அரக் கை சட்டை ஒன்றும். இரத்தம் தோய்ந்த கருப்பு கலர் ஜட்டி ஒன்றும் படிவம் 91 மூலம் கைப்பற்றினேன். படிவம் 91 அ.த.சா.ஆ.13 மற்றும் 14 ஆகும். சம்பவ இடத்தை நேரில் பார்த்ததிலிருந்தும் சாட்சிகளை விசாரித்ததிலிருந்தும் எதிரிகள் யுவராஜ், பிரபு, கணேசன், கிரிதரன் ஆகியோர்கள் இறந்த நபரை தேசிய நெடுஞ்சாலையில் விரட்டி இரும்பு பைப்பால் தாக்கியும், கத்தியால் வெட்டியும் கொலை செய்தது தெரிய வந்தது. பின்னர் 24.04.2019 அன்று இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளை விசாரணை செய்ததில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மேற்படி நான்கு எதிரிகளை சத்துவாச்சாரி கணபதி நகர் சுடுகாடு அருகில் கைது செய்து சாட்சிகள் சுந்தரமகாலிங்கம் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் ராஜன் கிராம உதவியாளர் ஆகியோர் முன்னிலையில் முதலாம் எதிரி யுவராஜ் என்பவரை காலை 10.30 முதல் 11.30 மணி வரை அவரை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி யுவராஜிடமிருந்து 11.45 மணிக்கு இரத்தக் கரை

படிந்த கத்தி ஒன்றையும் புதரிலிருந்து மறைத்து வைத்திருந்த சட்டையையும், இரத்தக் கரை படிந்த முக்கால் pant ஒன்றையும் கைப்பற்றினேன். எதிரி யுவராஜின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.15 ஆகும். கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.16. 2ம் எதிரி பிரபு என்பவரை 12 மணிக்கு விசாரித்து அதே சாட்சிகள் முன்னிலையில் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூல தகவலின் பேரில் எதிரி பிரபு மதியம் 01.00 மணிக்கு கணபதி நகர் ஆற்றங்கரை அருகேயுள்ள முட்புதரிடமிருந்து எடுத்து ஆஜர் செய்த கத்தி ஒன்று. TVS Apache TN-23-AR-3952 ஐ சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.17 ஆகும். கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.18 ஆகும். அதே இடத்தில் கிரிதரனை விசாரிக்க அவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மதியம் 1.15 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூல தகவலின் அடிப்படையில சுடுகாடு ஆற்றங்கரை அருகேயுள்ள முட்புதரிடமிருந்து மேற்படி எதிரி எடுத்து ஆஜர் செய்த இரும்பு பைப் ஒன்றை கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். எதிரி கிரிதரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.19. கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.20 ஆகும். அதே இடத்தில மதியம் 2.30 மணிக்கு எதிரி கணேசன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் முட்புதரிலிருந்து அவர் எடுத்து ஆஜர் செய்த இரும்பு பைப் ஒன்றையும் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.21 ஆகும். கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.22 ஆகும். எதிரி பொன்முடியை 03.05.2019 வருடம் கிராம நிர்வாக அலுவலர் சுந்தரமகாலிங்கம், உதவியாளர் ராஜன் முன்னிலையில் பகல் 11.15 மணிக்கு கைது செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூல தகவலின் பேரில் அவரிடமிருந்து Mahindra இருசக்கசர வாகனம் TN-23-AH-7116 மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தின்அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.23. கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.24 ஆகும். மேற்படி எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு ஒப்புவித்தேன். மேற்படி வழக்கு சொத்துக்களை படிவம் 91 ல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இரத்தம் தோய்ந்த உடைந்த சிமெண்ட் தரை சா.பொ.1 ஆகும். இரத்தம் தோயாத உடைந்த சிமெண்ட தரை சா.பொ.2 ஆகும்.

சம்பவயிடத்தில் படிந்து இருந்த இரத்தத்தை பருத்தி பஞ்சில் துடைத்த மாதிரி சா.பொ.3 ஆகும். இரத்தக் கரை படிந்த Blue Jeans Pant சா.பொ.4. இரத்தக் கரை படிந்த Light Blue Colour அரைக்கை சட்கை சா.பொ.5. இரத்தக் கரை படிந்த கருப்பு கலர் ஜட்டி சா.பொ.6. சுமார் 48 செ.மீ. இரும்பு பகுதி 10 செ.மீ. மரக் கைப்பிடி கொண்ட கத்தி சா.பொ.7. இரத்தக் கரை படிந்த கருநீள மஞ்சள் வெள்ளை பூ போட்ட அரைக்கை சட்டை சா.பொ.8. கருப்பு மஞ்சள் வெள்ளை கட்டம் போட்ட முக்கால் Pant சா.பொ.9. கத்தியின் நீளம் சுமார் 50 செ.மீ. சா.பொ.10. TVS Apache வண்டியின் புகைப்படம் அ.த.சா.ஆ.25. சுமார் 50 செ.மீ. நீளம் மற்றும் 2 செ.மீ. விட்டம் கொண்ட இரும்பு பைப் சா.பொ.11. சுமார் 75 செ.மீ. நீளம் 2 1/2 செ.மீ. விட்டம் கொண்ட இரும்பு பைப் சா.பொ.12. Mahindra Pink TN-23-AH-7116 புகைப்படம் அ.த.சா.ஆ.26. எனது விசாரணையில் பாஸ்கர், விஜயகுமார் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லியுள்ளார். எனது விசாரணையில் கணேசன், குமரன் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லியுள்ளார்கள். எனது விசாரணையில் சாட்சி சதீஷ் எதிரிகள் குற்ற செயல் பற்றி சொன்னதை பற்றி கூறியுள்ளார். நான் பணி மாறுதல் ஆகி சென்றுவிட்டதால் எனக்கு பின்பு பணியில் வந்து சேர்ந்த அழகுராணி மேல் விசாரணை செய்தார்.

<u>**குறுக்கு விசாரணை**</u>:-

வழக்கு பதிவு செய்த உதவி ஆய்வாளரை நான் விசாரணை செய்யவில்லை அழுகுராணி தான் விசாரணை செய்தார். 21.04.2019, 00.30 மணிக்கு நான் வழக்கு கோப்பை விசாரணைக்கு பெற்றுக் கொண்டேன். உதவி ஆய்வாளர் ராமச்சந்திரன் வழக்கு கோப்பை மேல் விசாரணைக்கு என்னிடம் ஒப்புவித்தார். சம்பவயிடத்திலிந்து காவல் நிலையம் 1.5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. 20.04.2019 நான் அயல் பணியிலிருந்தபோது இரவு 23.30 மணி அளவில் இந்த சம்பவம் தொடர்பாக எனக்கு தகவல் கிடைக்கப்பெற்றது. சம்பவம் குறித்து காவல் நிலையத்திற்கு தொலைபேசி வாயிலாக யாரும் தகவல் தெரிவிக்கவில்லை. வழக்கு சம்பவம் இரவு 8.15 மணிக்கு நடைபெற்றதாக தகவல் கிடைக்கப்பெற்றது. நான் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு வரும்போது சம்பவயிடத்திற்கு வரும்போது வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் இருந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரேத விசாரணை அறிக்கையில் எதிரிகள் பெயர் குறித்து சாட்சிகளோ, பஞ்சாயத்தாரோ எதுவும் சொல்லவில்லை. கோவிந்தன் கொடுத்த எழுத்து மூலமான புகாரில் எதிரிகள் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரி. புகார்தாரர் கோவிந்தன் கொடுத்த

புகாரில் இறந்த அவரது மகன் செல்வராஜ் கோவிந்தன் சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தபோது உயிருடன் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரி. இவ்வழக்கில் ஆம்புலன்ஸ் டிரைவரை விசாரிக்கவில்லை என்றால் சரி. வழக்கு சான்று பொருட்களை பிரேத பரிசோதனை செய்த மருத்துவரிடம் காண்பித்து இறந்த நபருக்கு உண்டான காயங்கள் மேற்படி சான்று பொருட்களால் ஏற்பட கூடுமா என கருத்துரை பெற்றேனா என்றால் பெற்றேன் ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எந்த தேதியில் மருத்துவரிடம் கருத்துரை பெற்றேன் என கூறமுடியுமா என்றால் 03.05.2019 அன்று மருத்துவரிடம் மேற்படி வழக்கு சான்று பொருட்களை காண்பித்து கருத்துரையை பெற்றேன். மருத்துவரிடம் ஆயுதங்களை காண்பித்து கருத்துரை பெறவில்லை ஆயுதங்களை உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கையில் உதவி ஆய்வாளர் அடையாளம் தெரியாத எதிரிகள் என்று தான் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரி. சாட்சிகளை விசாரணை செய்ததை கையால் எழுதி பின்னர் காவல் நிலையம் சென்று தட்டச்சு செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரியல்ல. Laptop எடுத்து கொண்டு போய் பதிவு செய்தேன். 1 முதல் 4 எதிரிகளை கணபதி நகர் சுடுகாடு அருகே கைது செய்தேன். நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றும், சொன்ன நேரம் சொன்ன விதம் சொன்ன மாதிரி எதிரிகளை கைது செய்யவில்லை என்றும், எதிரிகளிடமிருந்து எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றும், எதிரிகளிடமிருந்து எந்தவித வழக்கு சொத்தை கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. காந்தி நகர் வழியாக கணபதி நகர் சுடுகாட்டுக்குச் சென்றேன். சத்துவாச்சாரி காந்தி நகரிலிருந்த கணபதி நகர் சுடுகாடு எவ்வளவு தூரம் என்பது நினைவில்லை. எதிரிகளை கைது செய்யும்போது என்னுடன் 2 சிறப்பு உதவி ஆய்வாளர், 1 உதவி ஆய்வாளர் மற்றும் 4 காவலர்கள் வந்தார்கள். உதவி ஆய்வாளர் இராமச்சந்திரன், வெங்கடேசன் காவலர், தலைமைக் காவலர் புருசோத்தமன் மற்ற நபர்களின் பெயர்கள் நினைவில்லை. காந்தி நகர் எல்லையிலிருந்து, கணபதி நகர் சுடுகாடு 1.5 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் என்றால் சரியல்ல 0.5 கிலோ மீட்டர் இருக்கும். எதிரிகளை கைது செய்த இடத்தில் மக்கள் யாரும் வசிக்கவில்லை தனி நபர் சாட்சிகள் யாரும் அங்கு கிடையாது. எங்களுக்கு Laptop வழங்கப்படவில்லை என்றால் சரி சொந்தமாக Laptop வைத்துள்ளேன். ஒப்புதல் வாக்குமூலத்தை சுடுகாட்டில்வைத்து Laptop ல் தயார் செய்ததை காவல் நிலையம் வந்து Laptop லிருந்து Print எடுத்து கையெழுத்து வாங்கினேன். இறந்த நபர் மீது சில வழக்குகள்

இருந்தது தெரியும் கொலை வழக்கு இருந்தது பற்றி தெரியுமா என்றால் சில வழக்குகள் இருந்தது பற்றி தெரியும். இறந்த நபருக்கு எதிராக பதியப்பட்ட வழக்கில் சாட்சிகளை விசாரித்தேனா என்றால் அந்த சாட்சிகளை நான் விசாரிக்கவில்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன மாதிரி சம்பவம் நடைபெற்றிருந்தால் பிராதான சாலையிலுள்ள ஆவின் பால் பண்ணை ஊழியர்களோ, பொது மக்களோ உடனடியாக புகார் அளித்திருப்பார்கள் என்றால் எதிரிகள் வீச்சு தினேஷ் மற்ற எதிரிகள் என்றால் வேலூரிலுள்ள மக்கள் பயத்தினால் உடனே புகார் அளிக்கவில்லை. நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சாட்சிகளை விசாரித்து வாக்மூலம் பதிவு செய்து இருந்தால் உடனடியாக நீதிமன்றத்திற்கு ஆவணங்களை அனுப்பி இருப்பேன் என்றும் வழக்கிற்கு தோதாக தாமதமாக ஆவணங்களை அனுப்பி இருக்க மாட்டேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த சம்பவத்திற்கு முன்பாக இறந்த நபர் அவரின் பெற்றோர், சகோதரர் எதிரிகள் மீது புகார் கொடுக்கவில்லை என்றால் சரி. ஆனால் வாக்குமூலத்தில் எதிரிகளுக்க இறந்தவர் மீது பகை இருந்ததை பற்றி சொல்லியுள்ளார்கள். இறந்த நபர் மீது எதிரிகளுக்கு பகை இருந்தால் புகாரிலும் பிரேத விசாரணையின் போதும் எதிரிகளை பற்றி சொல்லியிருப்பார்கள் என்றால் அந்த சோகமான பதஷ்டமான சூழ்நிலையில் அவர்கள் சொல்லாமல் இருந்திருக்கலாம். சோகமான பதஷ்டமான சூழ்நிலையில் இருந்ததால் புகாரிலும் பிரேத விசாரணையிலும் எதிரிகளின் விரோதத்தைப் பற்றி எனது விசாரணையில் சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார்கள். அவ்வாறு அவர்கள் எனது விசாரணையில் சொல்லவில்லை என்றும் வழக்கை மேம்படுத்துவதற்காக தற்போது நான் அவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல. இறந்தவரை மருத்துவமனையில் 108 ஆம்புலன்ஸ் டிரைவர் சிகிச்சைக்கு சேர்தார் என்றால் சரி. புகார்தாரர் அவரது மகனை மருத்துவமனையில் சேர்த்தேன் என குறிப்பிட்டது குறித்து நான் விசாரணை செய்தேனா என்றால் நான் விசாரணை செய்யவில்லை. வேலூர் அரசு மருத்துவமனையிலுள்ள புறக்காவல் நிலையத்திலிருந்து சட்டம் சார்ந்த வழக்கிற்காக இறந்தவர் சிகிச்சைக்கு சேர்த்தது பற்றி தகவல் கொடுத்தார்களா என்றால் புறக்காவல் நிலையத்திலிருந்து தகவல் வந்தது. புறக்காவல் நிலையத்திலிருந்து வந்த தகவலின் அடிப்படையில முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை. இந்த விசாரணையில் நான் எங்கு சென்றேன் எப்போது சென்றேன் என்று பொது நாட்குறிப்பேட்டில் குறிப்பிட வேண்டும் என்றால் சரி. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை

என்றால் சரியல்ல. எதிரிகள் இறந்தவரினுடைய உறவினர் என்றும் சரிவர புலன் விசாரணை செய்யாமல் உயர் அதிகாரிகள் சொல்படி தவறுதலாக சம்மந்தமே இல்லாத எதிரிகள் மீது வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து எவ்வித வழக்கு சொத்துக்களும் கைப்பற்றப்படவில்லை என்றும் வழக்கு சொத்தை நாங்களே தயார் செய்து கையிருப்பு சாட்சிகளை வைத்து வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

Ensured that the witness evidence is recorded through video conferencing is not tutored and witness is not in the company of any body at the time.

Typed to my dictation in open Court, read over by the Witness through Video conferencing, admitted and acknowledged by him to be Correct.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.01.20 19:52:54 +0600

Additional District Judge(FTC),
Vellore.